# 18மாணவர்களை இராணுவம் கொலைசெய்ததாக அரசின் மனித உரிமைக் குழு குற்றச்சாட்டு!


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 27 இதழ் 214
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 12 — 09 — 1992


(கொழும்பு)
ஜே. வி. பி. இயக்கத்துக்கு ஆதரவாகவும், அரசுக்கு எதிராகவும் பிரசாரங்களில் ஈடுபட்ட 18 பாடசாலை மாணவர்களை இராணுவத்தினர் படுகொலை செய்துள்ளார்கள் என்று அரசின் மனித உரிமைக்குழு குற்றம் சாட்டியுள்

(4ம் பக்கம் பார்க்க)

## படகு 'கண்ணி'யிலேயே சிக்கிச்சிதறியது

(திருகோணமலை)
மூதூர் கடலில் நேற்று முன்தினம் சென்றபடகு விடுதலைப் புலிகள் வைத்த கண்ணிவெடியிலேயே சிக்கிச் சிதறியதாக நேற்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.
திருமலை மாவட்டத்திலுள்ள கிளிவெட்டிப் பகுதியிலிருந்து மூதூருக்கு இராணுவத்தி

(4ம் பக்கம் பார்க்க)

## மூதூர் சம்சவம்: பலியானவர் தொகை 44ஆக அதிகரிப்பு

(திருமலை)
திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிளிவெட்டிக்கும் மூதூருக்குமிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்றபடகு தகர்ப்பு சம்பவத்தில் 44 பேர் வரை பலியாகியதாக

(4-ம் பக்கம் பார்க்க)

### மூதூர் படகு வெடிப்பின் பிரதிபலிப்பு:

# கிழக்கின் பாதுகாப்பு முறையை மாற்றியமைக்க அரசு முடிவு?

(கொழும்பு)
கிழக்கில் பாதுகாப்பு நடவடிக்கைகளை முற்றாக மாற்றியமைப்பது குறித்து பாதுகாப்பு உயரதிகாரிகள் தற்போது தீவிரமாக ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கிழக்கில் விடுதலைப்புலிகளின் தாக்குதல் தீவிரமடைந்து வருவதன் காரணமாகவே அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை முற்று முழுதாக மாற்றியமைப்பதுபற்றி ஆராயப்பட்டு வருகிறது.

நேற்று முன்தினம் மூதூர் கடலில் படகொன்று குண்டு வைத்து தகர்க்கப்பட்டது பாதுகாப்பு உயரதிகாரிகளைப் பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளதாம். இதில் 24 இராணுவத்தினர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

கடந்த மாதம் அராலித்துறையில் அமுக்கக் கண்ணி வெடியில் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, பிரிகேடியர் விஜய விமலரத்ன உட்பட இராணுவ உயரதிகாரிகள் பலியானதற்குப் பின்னர் பாதுகாப்பு உயரதிகாரிகளை மூதூர் சம்பவம் பேரதிர்ச்சிக்குள்ளாக்கியிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மூதூர் சம்பவத்திற்குப் பின்னர் கொழும்பில் பாதுகாப்பு உயரதிகாரிகளின் உயர்மட்ட மாநாடொன்று நடைபெற்றதாகவும் இந்த மாநாட்

(4ம் பக்கம் பார்க்க)

## பரீட்சை பெறுபேறுகள் மீளாய்வு

(கொழும்பு)
1991ல் வடக்கு-கிழக்குக்கென நடாத்தப்பட்டு க. பொ. த. (உயர்தர) விசேட பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதாவுக்கு கொலைப்பயமுறுத்தல் இளைஞர் கைது!

(சென்னை)
தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கு கொலைப் பயமுறுத்தல் செய்தியை அனுப்பவந்த இளைஞர் ஒருவர் அந்தச்செய்தியுடனேயேகைது செய்யப்பட்டுள்ளார்.

முதல்வர் ஜெயலலிதாவை கொலை செய்வதற்கான முயற்சி ஒன்று திருச்சியில் மேற்கொள்ளப்படும் என்று கூறும் பக்ஸ் [Fax] செய்தியை கையளிக்க மத்திய தொலைபேசி அலுவலகம் வந்த ஜோ'

(4 ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் அகதிமுகாம்களை மூடிவிட அரசுமுடிவு

(கொழும்பு)
கொழும்பில் தமிழர்கள் தஞ்சமடைந்திருந்த அகதிமுகாம்களை இம்மாத முடிவிற்குள் மூடிவிட அரசு முடிவு செய்துள்ளது.

இங்கு தங்கியுள்ள அகதிகள் அனைவரையும் வடக்கு-கிழக்கு பகுதிகளில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் குடியேற்றவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது கொழும்பில் பல்பலப்பிட்டி மாணிக்கப் பிள்ளையார் கோவில், சரஸ்வதி மண்டபம், கொட்டாஞ்சேனை விவேகானந்தா சபை மண்டபம், முகத்துவாரம் கோவில் ஆகிய 4 இடங்களி

(4ம் பக்கம் பார்க்க)

## 'ரைம்' சஞ்சிகை நிருபர் யாழ். விஜயம்

(நெல்லியடி)
பருத்தித்துறைக்கு வந்த 'குமண' கப்பலில் அமெரிக்க 'ரைம் மகசின்' நிருபர் செல்வி அனித்தா பிரதாப் கொழும்பிலிருந்து வந்துள்ளார். இவர் நேற்றுக்காலை கப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகத்தில் வந்திறங்கினர். இவரை சந்தித்த எமது நெல்லியடி நிருபரிடம் தான் கடந்த 10 வருடங்களுக்கு முன்பாக வடபகுதிக்கு விஜயம் மேற்கொண்டபோது பலவீடுகளும் கட்டிடங்களும் சேதமடைந்

(4 ம் பக்கம் பார்க்க)

## கண்ணை இமை காக்கும் காடுகள் எமைக் காக்கும்

## பென்சன் வவுச்சர்களும் குமணவில் வந்தது

(நெல்லியடி)
நேற்று முன்தினம் வந்த ''குமண'' கப்பலில் இம்மாதத்துக்கான பென்சன் வவுச்சர்கள் வந்து சேர்ந்தன. இந்தக் கப்பலில் வந்தஏனையபொருட்களின் விபரம் வருமாறு:

(4ம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனை ஆதரித்து பேசும் மத்தியமாநிலஅரசுகள் மீது வாழப்பாடி பாய்ச்சல்

(சென்னை)
மத்திய அரசும், மாநில அரசும் விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் பிரபாகரனை ஆதரித்துப்பேசி வருவது கண்டிக்கத்தக்கதென தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடிராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சேலத்தில் நேற்று பத்திரிகையாளர் மத்தியில் உரை

(4ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. (உ/த-1992) பௌதீகவியல் II பரீட்சை அக். 24ல் நடைபெறும்

(கொழும்பு)
1992ம் ஆண்டிற்கான க. பொ. த. (உயர்தரம்) பரீட்சைக்கான பௌதீகவியல் வினாத்தாள் IIஇற்கானவிசேட பரீட்சை அடுத்தமாதம் 24ம் திகதி நடைபெறுமென பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)



தமிழீழ காவல்துறையில் 2-வது அணி அதன் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறும்போது யாழ். நகரில் நடைபெற்ற அணிவகுப்பு மரியாதையை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் பார்வையிடுவதை படத்தில் காணலாம். [இ-வி]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

இறக்குமதி செய்யப்பட்ட பீற்றூட் விதைகள் விற்பனைக்குண்டு (100 g ரின்) சனி ஞாயிறு தினங்களில் வீட்டிலும் பெற்றுக்கொள்ளலாம். 67, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். தொடர்பு: பிள்ளையார் 251 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி-6782)

### வாங்கலாம் விற்கலாம்

Casio-Solar, Seiko, Citizen ஆட்டோமரிக், நஷனல் RX-34 ஆகியன உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு. பாவித்த தரமான மணிக்கூடுகள், றேடியோக்கள் வாங்கவும் விற்கவும் தொடர்பு கொள்ளுங்கள்: டிக்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். எமக்கு வேறு கிளைகள் கிடையாது. (சி-6789)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு. வாதரோகங்கள், வலிட்புநோய், பீநிசம், தலையிடி, தலை காலயியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு மூலவியாதிகள்; மூத்திரரோகங்களில் பிரபலமானவர்; சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு யாழ்பாணம். (சி-6761)

### குரு வியாழ மாற்றம்

(11 9-92) திருக்கணிதப்படி வியாழ மாற்றமும், பகவான் ஸ்ரீநீலகண்டபாபா தெய்வீக அற்புதங்களும் ரூ. 8/50 விற்பனையாகின்றன. கனகா ரேடர்ஸ் திருநெல்வேலி, பாலாஜி புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். எழுதியவர் Prof சத்தியதாஸன். (இ-6798)

### நீமியா உரம்

நெற்பயிருக்குச் சிறந்த அடிக்கட்டு உரமான நீமியா உரம் அனைத்துப் பயிர்களுக்கும் உகந்தது. பூச்சி புழுக்களிலிருந்து பாதுகாப்புத் தருவது நீமியா உரம். கூடிய விளைச்சலைத் தருவது நீமியா உரம் கிலோ ரூபா 15/- 20 கிலோ ரூபா 260/- அண்ணா கோப்பி கடைகளிலும் கிடைக்கிறது. மில்க்வைற் யாழ்ப்பாணம். (ஏ 243z)

## இராசி பலன்

**12-09-1992**

**சனிக்கிழமை**

**(தமிழுக்கு ஆவணி 27)**

(பூரணை காலை 7-56 வரை: பூரட்டாதி மு. இ. 11-52 வரை இராகுகாலம் காலை 9-03 முதல் 10-33 வரை, சுபநேரம் மாலை 3-03 முதல் 4-33 வரை மரணயோகம்).

மேடம்; சர்வாதிகார உணர்ச்சி, வாழ்க்கைப் போராட்டம், தொழில் நஷ்டம்.

இடபம்: புத்திரர் பெருமை, செல்வாக்கு, குடும்பசுகம்.

மிதுனம்: கலைத்துறை ஈடுபாடு காரியசித்தி, பணவரவு.

கடகம்: கீழான சிந்தனை, உறவினர் பகை, கவலை.

சிங்கம்: சகோதரி பகை, வேண்டாத தொல்லை, வெறுப்பு.

கன்னி: வாக்குவன்மை, புதிய சிந்தனை, பொதுப்

(4ம் பக்கம் பார்க்க)

## மாநாடு

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு புனர்வாழ்வு சம்பந்தமான மாநாடு எதிர்வரும் 28ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதில் வட கிழக்கு மாகாண மாவட்ட அரச அதிபர்கள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (கே)

## இணுவிலில் மகாஜன

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, கடந்த 9ம் திகதி புதன்கிழமை தொடக்கம் இணுவில் சைவ மகாஜன மத்திய வித்தியாலயத்தில் மாலை நேரப் பாடசாலையாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

மாலை நேரப் பாடசாலை பிற்பகல் 1-15க்கு ஆரம்பமாகும் சகல மாணவர்களும் வருகை தரும்படி கோரப்படுகின்றனர்.

# விடுதலை பெறும் வரை ஆயுதப்போர் தொடரும்

(உடுவில்)

' 1956ம் ஆண்டில் இருந்து தமிழினம் தன் உரிமைக்காகவும் விடுதலைக்காகவும் சிங்கள அரசாங்கங்களுடன் பல தடவைகளில் ஒப்பந்தங்களும் உடனடிக்கைகளும் செய்து கொண்டுங்கூட, அவை உரிய முறையில் செயற்படுத்தப் படாமையால் ஆயுதப் போராட்டம் நடத்தவேண்டிய நிலை ஏற்பட்டது ஆயுதம் ஏந்திய போராளிகள் விடுதலை காணும் வரை போராட்டத்தைக் கைவிடமாட்டார்கள்,''

நவாலி அம்மன் கோவிலில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய மானிப்பாய்- ஆனைக்கோட்டை மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி தமிழிச்சி இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது! உலக நாடுகள் பலவும் விடுதலைப் புலிகளின் போராட்ட வளர்ச்சியைக் கண்டு பிரமிப்படைந்துள்ளன.

நாம் வீணாக யாருடனும் யுத்தம் புரியவில்லை. எமது மண், எமது இனம் விடுதலை பெறவேண்டும். சிங்கள அரசால் தமிழினமும், தமிழ் மண்ணும் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேல இச் சிங்கள அரசு இதனையே செய்து வருகின்றது. தமிழர்கள் தம் சொந்த இடங்களிலேயே நிம்மதியாக வாழமுடியாதவாறு தாக்குதல்களை நடத்தி அழிவுகளைச் செய்கின்றனர். தாக்குதலைத் தாங்கமுடியாத அப்பாவித் தமிழர்கள் தம் இருப்பிடங்களை விட்டு வெளியேறி முகாம்களில் தங்குகின்றனர்

எவ்வளவு இழப்புக்கள் நேர்ந்தாலும் தமிழினம் விடுதலை பெறும் வரை புலிகள் ஆயுதங்களைக் கீழே போடமாட்டார்கள். கடைசிப் புலி வீரன் இருக்கும்வரை நாம் எதனையும் விட்டுக்கொடுக்கமாட்டோம் என்றும் அவர் கூறினார். (109)

## உதைபந்தாட்டப் போட்டி

1987ம் ஆண்டு நடந்த அசம்பாவிதங்களில் இறந்த கோண்டாவில் வடக்கைச்சேர்ந்த 53 பொதுமக்களின் ஞாபகார்த்தமாக கலைவாணி ச. ச நிலையமும், கலைவாணி விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்தும் 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டி.

இதில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அணிகள் யாவையும் கேட்டுக்கொள்கிறோம்.

எதிர்வரும் 20-9-92க்கு முன்னர் உங்களின் விண்ணப்பங்களை விண்ணப்பிக்கவும்

**போட்டியில் வெற்றிபெறும் கழகங்களுக்கு**

- ★ 1-ம் பரிசு 5000/- ரொக்கம்
- ★ 2-ம் பரிசு 2000/- ,,
- ★ 3 ம் பரிசு 1000/- ,,

பணப் பரிசில்களுடன் விருதுகளும் வழங்கப்படும்

விண்ணப்பிக்கும் முகவரி:

★ **மதன் கடை**

(டிப்போக்கு முன்பாக)
பலாலி வீதி, கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

★ **Jaffna Technical Institute**

(றெயில்வே கடவைக்கு அருகாமையில்)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்-

(ஏ-2431)

## விண்ணக வாழ்வில் மூன்று ஆண்டுகள்...

★★



★★

**அமரர் டேவிற் நவரட்ணம்**

(எழுதுவினைஞர், கல்லோயா அபிவிருத்திச்சபை, மட்டக்களப்பு)

மண்ணில்: **12-12-1921**

விண்ணில்: **12-09-1989**

ஊர் போற்ற உலகம் போற்ற
வாழ்ந்த எங்கள் குடும்ப ஒளிவிளக்கே
நீங்கள் மறையவில்லை, என்றென்றும்
எங்கள் நெஞ்சங்களில் வாழ்கின்றீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்:
**அன்பு மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

பிரசாத் வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(எ-2430)

## 'வணிகநாதம்' சஞ்சிகை வெளியீட்டு விழா

(உடுவில்)

கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரி வணிக மாணவர் மன்றத்தினரின் முதல் வெளியீடான ''வணிக நாதம்'' சஞ்சிகை வெளியீடு கல்லூரி மண்டபத்தில் செல்வன் இ விஜயகுமார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் இலங்கை வங்கிமுகாமையாளர் திரு. இ. விவேகானந்தசர்மா பிரதம விருந்தினராக இதில் கலந்து கொண்டார்.

சுன்னாகம் கொத்தணி அதிபர் திரு ப விக்னேஸ்வரன் சஞ்சிகையை வெளியீட்டு உரை நிகழ்த்தினார்.

சஞ்சிகையின் முதற் பிரதியைஇளைப்பாறிய கணக்காளர் திரு. சி சிவப்பிரகாசம் பெற்றுக்கொண்டார்.

யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை விரிவுரையாளர் திரு. இ. நந்தகுமாரன், வணிக முகாமைத்துவ விரிவுரையாளர் திரு. கே. கே. அருள்வேல் ஆகியோர் நூல் ஆய்வுரை நிகழ்த்தினர். (109)

## 80 மாணவ தாதியர்க்கு நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையில் மூன்றாண்டுகள்வரை பயிற்சிபெற்று பரீட்சையில் சித்தியடைந்த மாணவத்தாதியர்களில் 129 பேரில் 80 பேர் மட்டுமே யாழ். போதனா வைத்தியசாலையில் கடமை புரிவதற்கு நிரந்தர நியமனம் பெற்றுள்ளனர்.

இந்நியமனம் இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிவித்தல் கொழும்பிலிருந்து நேற்று யாழ். வைத்தியசாலைக்குக் கிடைத்தது. (56)

## புதிய தேர்

(மாத்தளை)

1983ம் ஆண்டு வன்செயலின் போது எரிக்கப்பட்ட மாத்தளை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேருக்குப்பதிலாக புதிய தேர் உருவாகி வருகிறது.

25 லட்சரூபா செலவில் சுமார் 27 அடி உயரமான தேர் உருவாக்கும் பணியில் திருநெல்வேலி ஸ்தபதி கனகசபை செல்வராஜா ஈடுபடுத்தப்பட்டுள்ளார். (கே)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை-கிழக்கு, துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் வருடாந்த சகஸ்ர சங்காபிஷேகம், நாளை 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

## இரு நாள் 'பாரதி விழா'

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபை நடாத்தும் இரு நாள் 'பாரதி விழா' இன்றும் நாளையும் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும், நல்லூர் கம்பன் கோட்டத்திலும் நடைபெறவுள்ளது.

இன்று பி. ப. 3 மணிக்கு ஆரம்பமாகும் விழாவில் சிறப்புரைகள், ஆய்வரங்குகள், நாடக அரங்கும் நாளை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் விழாவில் சிறப்புரைகள், கருத்தரங்கு, கலையரங்கு என்பனவும் நடைபெறவுள்ளன. (சி)

## ஆலோசனை பெறவேண்டும்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் போரில் தம்மைத் தற்கொடையாக்கிக் கொண்ட மாவீரர்கள் சம்பந்தமான விழாக்கள். போட்டிகள், வைபவங்கள் எவையானாலும் தமிழீழம் உள்ளடங்கலாக நடாத்துவதற்கு விரும்பும் சங்கங்கள், பொது ஸ்தாபனங்கள், பாடசாலைகள், ஏனைய துறைசார்ந்த நிறுவனங்கள் எவையாயினும் தமிழீழ மாவீரர் பணிமனையின் ஆலோசனைகளையும், ஒத்துழைப்பையும் பெற்று அவர்கள் அனுசரணையுடன் நடாத்துவது மாவீரர்களுடைய வரலாற்றுக்கு உறுதுணையாக அமையுமெனத் தமிழீழ மாவீரர் பணிமனை வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ)

## பெயர் மாற்றம்

கரவெட்டி, துன்னாலை வடக்கு தாமரைக்குளத்தடியைச் சேர்ந்த திரு. திருமதி நவரத்தினம் உதயகுமாரி தம்பதிகளின் மகனாகிய, ''பிரபாகரன்'' 12-02-92 லிருந்து, எனது பெயரை 'சுபாகரன்' என சகல நடவடிக்கைக்கும் மாற்றம் செய்கின்றேன்

திரு. ந சுபாகரன்,
தாமரைக் குளத்தடி,
துன்னாலை-வடக்கு,
கரவெட்டி.

(இ-6805)

# அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெறுவதற்கு தமிழருக்கு நம்பிக்கை ஒளியூட்டிய பாரதியார்

## கலாநிதி எஸ். ஜெயநேசன்



பாரதியார் 1921ம் ஆண்டு செப்டப்பர் மாதம் 11ம் திகதி மறைந்தார். பஞ்சமும் நோய்களும் வாட்டிய சூழ்நிலையிலேதான் அவர் இந்த உலக வாழ்வை நீத்தார். அப்பொழுது அவர் ''சுதேசமித்திரன்'' பத்திரிகைத் துணையாசிரியர். செப்டம்பர் 12ம் திகதி ''சுதேசமித்திரன் தனது ஆசிரியத் தலையங்கத்தில் பின்வருமாறு எழுதியது.

''தமிழ்நாடு போற்றும் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் இவ்வுலக வாழ்வை நேற்றிரவு துறந்து விண்ணவர்க்கு விருந்தாகிவிட்டார். என்ற செய்தியை அறிவிக்க நமது மனம் பதறுகிறது சில தினங்களாக நோயினால் வருந்திக்கொண்டிருந்த அவரை மறுபடியும் ஸ்தூலசரீரத்தில் பார்க்கப்போகிறதில்லை என்று நாம் நினைக்கவில்லை ...''

எந்த சூழலில் வாழ்ந்தாலும் நம்பிக்கையை இழக்காதவர் பாரதியார். தனது வறுமை நிலையும், நாட்டின் அடிமைத்தனம் மக்கள் அறிவீனமும் அவரைப்பெரிதும் வாட்டின. அந்தச் சூழலில் மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதனையே தனது தலையாய பணியாகக் கொண்டார்.

''தமிழா, தெய்வத்தை நம்புடயப்படாதே உனக்கு நல்ல காலம் வருகிறது'' என்று அவர் 'தமிழருக்கு' என்ற கடிதரயில் எழுதினர். அவர் வாழ்ந்த காலத்தில் ஆங்கில ஆட்சி உறுதியாக நிலைபெற்றிருந்தது. அவர் பிறப்பதற்கு ஆறு வருடங்களுக்கு முன்னர் விக்டோரியா மகாராணியார் எழுதினர். ''விக்டோரியா ஆகிய யாம் இந்தியர்கள் எமது அரசவம்சத்திற்கும், சிம்மாசனத்திற்கும் காட்டுகின்ற விசுவாசத்தினதும் பற்றினதும் அறிகுறிகளைக் கண்டு உணர்ச்சி வசப்பட்டோம்.'' பாரதியாருக்குச் சோர்வு ஏற்படவில்லை பொழுது புலர்ந்துவிட்டதனையும் புன்மை இருட்கணம் யாவும் போய்விட்டதனையும் தனது ஞானதிருஷ்டியினால் கண்டு மக்களுக்கு நம்பிக்கையூட்டினர். அரசியல் நிலையில் ஆன்மீகநெறியில் சமூகவியலில் விடுதலை சமீபம் என்று நிரூபித்துக்காட்டினர்.

''எனினுமிங்கிவை யெலாம்
இறைவன் அருளால்
நீங்குவ யன்றி நிலைப்பன
வல்ல''

என்பது அவருடைய சிந்தனைத் தெளிவைக்காட்டுகின்றது. தெய்வம் நமக்குத் துணைபாப்பா ஒரு தீங்குவர மாட்டாது பாப்பா என்று பாடியவர்.

''இன்றெமை வருத்தும்
இன்னலிகள் மாய்க
நன்மைவந் தெய்துக
தீதெலாம் நலிக
அறம் வளர்ந்திடுக''

என்று வாழ்த்தினர் அந்த மனோதிடன்தான் அவருக்கு சுதந்திர இந்தியாவை கண்முன் நிறுத்தியது.

ஆன்மீகத்துறையிலும் வெற்றி கிட்டிவிட்டதெனப் பாரதியார் உணர்ந்தார். பயம், அழுக்காறு, குரோதம் எல்லாவற்றையும் வெல்லும் போகும்காலம் சமீபித்துவிட்டது என்று உணர்ந்தார். பின்வரும் பாடல் அவர் மனோநிலையை எடுத்துக்காட்டுகின்றது.

''மூட நெஞ்சே முப்பது
கோடி
முறையுனக்குரைத்தேன்
இன்னு மொழிவேன்
தலையிடி விழுந்தால் சஞ்
சலப்படாதே
எது நிகழினும் ''நமக்
கென்?'' என்றிரு

பராசக்தியுளத்தின் படி
யுலக நிகழும்
நமக்கேன் பொறுப்பு?''

ஜெயபேரிகை என்ற பாடலில் தனது வெற்றியைப் பெருமிதத்துடன் கூறுகின்றார்.

பயமெனும் பேய்தனை யடித்
தோம் - பொய்மைப்
பாம்பைப் பிளந்துயிரைக்
குடித்தோம்
வியனுல கனைத்தையும்
அமுதென நுகரும்
வேத வாழ்வினைக் கைப்
பிடித்தோம்

தனது காலத்தில் பெண்களின் அவல நிலை அவரைக் கலங்க வைத்தது பிஜி தீவிலே பெண்கள் பட்ட வேதனையைக் கண்டு சீறியெழுந்தார்.

விம்மி விம்மி விம்மி விம்மி
யழுங்குரல்
கேட்டிருப்பாய் காற்றே-
துன்பக்
கேணியிலே யெங்கள்
பெண்கள் அழுதசொல்
மீட்டு முரையாயோ?

என்று பாடிய பாரதியார் பெண்கள் ஆண்களோடு சரிநிகர் சமானமாகத் தமது சொந்த நாட்டிலே வாழுகின்ற காலம் அதிக தூரத்தில் இல்லையென்று உணர்த்தினர். பாரதி நொந்துபோன உள்ளங்களுக்கு நம்பிக்கையொளியூட்டிய மகான். தனது சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்விகள் அவரின் இலட்சியப் பட்டணத்தைப் பாதிக்கவில்லை. பாரதி நம்பிக்கையூட்ட வந்த மமனிதர். ''நம்பிக்கை என்பது எதிர்நோக்கப்படுபவை கிடைக்கும் என்கிற உறுதி கண்ணுக்குத் தெரியாதவை பற்றி ஐயமற்ற நிலை'' என்று விவிலியம் கூறுகின்றது.

பாரதியாரின் நினைவு நிழலாடும் இந்த நாளிலே அவர் சிந்தனைகளை மனங்கொள்ளுவோமாக. நம்பிக்கை வரட்சி மிகுந்த அவரின் காலத்தில் அவருக்குக் கைகொடுத்த தியாகிகளையும் நன்றியுணர்வுடன் நினைவு கூருவோமாக.

---

# ''தமிழ் மக்கள் ஏற்கும் விதத்தில் காவல்துறை செயற்படுகிறது''

## - நடேசன் பேட்டி -

(யாழ்ப்பாணம்)

''தமிழீழ மக்கள் ஒருங்கிணைந்த மனதுடன் ஏற்றுக்கொள்ளும் வகையில் சட்டத்தையும், ஒழுங்கையும் தமிழீழக் காவல்துறை நிறைவு செய்து வருகின்றது.''

இவ்வாறு தமிழீழக் காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா நடேசன், பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

''தமிழீழக் காவல்துறை ஆரம்பமாகிய 9 மாத காலத்திற்குள், பொதுமக்களின் ஆதரவுடன் நாம் பெரும் வளர்ச்சியை அடைந்துள்ளோம்.

''போர்க்காலச் சூழ்நிலைகள் ஏற்படும் வேளைகளில், யாழ். குடா நாட்டில் ஏற்பட்ட பதுக்கல்களைக் காவல்துறையினர் மிக வெற்றிகரமாக முறியடித்துள்ளனர்.

''அவ்வப்போது தலைதூக்கும் பலவித சண்டைகளை, அரச சார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்களின் உதவியுடன் மேற்கொண்ட நடவடிக்கைகளின் மூலம் நாம் சுமுகமாகத் தீர்த்து வைத்துள்ளோம்.

''வீதிப் போக்குவரத்துக்களில் நாம் மேற்கொண்ட நடவடிக்கைகளினால், பாரிய விபத்துக்களையும், மரணங்களையும் தவிர்த்து வருகின்றோம். இளம் வயதினர் சைக்கிள்களில் பக்கம் பக்கமாகச் செல்வதினாலேயே சிறு விபத்துக்கள் ஏற்படுகின்றன. இளம் வயதினர் வீதிகளில் பொறுப்புடன் நடந்துகொண்டால்: இது போன்ற விபத்துக்களை வருங்காலத்தில் பெருமளவில் தவிர்த்துக்கொள்ள முடியும்.

''காவல்துறை ஆரம்பமான பின்னர், முன்னைய காலங்களில் நடைபெற்றதுபோல் பாரிய கொள்ளைச் சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை. சிறுசிறு திருட்டுச் சம்பவங்கள் தற்போது நடைபெற்றுவந்தாலும், அவற்றுக்கு எதிராக நாம் உடன் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.



''தமிழீழக் காவல்துறை இந்தக் குறுகிய காலத்திற்குள் நாம் எதிர்பார்த்ததை விடப் பெரும் வளர்ச்சியடைந்தமைக்குக் காரணம் தமிழீழ மக்களின் தலைவர் திரு. வே. பிரபாகரனின் சரியான வழிகாட்டலே'' என்றும் திரு. நடேசன் தெரிவித்தார். (வி)

---

# தனிச் சிங்களத்தில் பதவிஉயர்வுகடிதம்

(மானிப்பாய்)

யாழ். செயலகத்தில் பணிபுரியும் அலுவலக ஊழியர்களின் பதவி உயர்வுக்கான கடிதங்கள் தனிச்சிங்களத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

செயலகத்தில் மத்திய அரசின் கீழ் பணிபுரியும் 5பேருக்கு அண்மையில் தரம் இரண்டுக்கான பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தது. தற்போது இவர்களுக்கான நியமனக்கடிதங்களை பொது நிர்வாக, மாகாணசபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சு தனிச்சிங்களத்திலேயே அனுப்பி வைத்துள்ளது. (71)

---

# இடம்பெயர்ந்தவர்களுக்கு வீடுகள் அமைக்க ஏற்பாடு

(மானிப்பாய்)

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மானிப்பாயில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு மேலும் பல வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது.

மானிப்பாய் பொதுச்சந்தைக்குச் சமீபமாக 75 வீடுகள் அமைக்கப்பட்டு அவை பூர்த்தியாகும் நிலையிலுள்ளன. இதனைவிட கட்டுடைபிரதான வீதியிலுள்ள காணியொன்றில் 60 வீடுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (71-ரி)

---

# கொலை, கொள்ளை தொடர்பாக முன்னாள் ராணுவ சிப்பாய் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா இராணுவத்தில் கடமையாற்றிய முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் நான்கு கொலைகளிலும், 14 கொள்ளைச் சம்பவங்களிலும் ஈடுபட்டமை கண்டு பிடிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நபரை சூரியவெவ பொலிசார் கைது செய்யச் சென்ற சமயம் அவர் பொலிசாரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் பின்னர் மடக்கிப் பிடிக்கப் பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரிடமிருந்த தன்னியக்க துப்பாக்கி ஒன்றும், 64 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுக் காசோலை, தங்க நகைகள் போன்றவையும் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளன.

பத்துப் பொலிஸ் நிலையங்களினால் தேடப்பட்டு வந்த இவர் பெலவத்தை தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த சமயம் தப்பியோடியவர் தற்பொழுது அம்பாந்தோட்டைப் பகுதியிலுள்ள ஹீனட்டிய கிராமத்தில் வைத்து இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை மணலாறு மாவட்டத்திலுள்ள இராணுவ முகாம் ஒன்றில் கடமையாற்றிய இராணுவ சிப்பாய் ஒருவர் இராணுவத்திற்கு சொந்தமான ரி 56 ரக துப்பாக்கி ஒன்றையும் 30 தோட்டாக்களையும் விற்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

---

# இந்தியாவில் குழந்தைகள் மீது பாலியல்வன்முறை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் மூன்று நான்கு வயது குழந்தைகள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்படுவதாக அதிர்ச்சி தகவல்கள் வெளிவந்துள்ளன.

1992ம் ஆண்டில் கடந்த ஆறு மாதங்களில் மட்டும் 143 பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டது தொடர்பாக வழக்குகள் பதிவாதியுள்ளன.

பாலியல் வன்முறை மேற்கொள்ளப்பட்ட 143 பெண்களில் 107 பேர் 18 வயதிற்கும் குறைவானவர்கள் என்றும் இதில் 43 பேர் 12 வயதிற்கும் குறைவானவர்கள் என்றும் இதில் சில பெண் குழந்தைகளின் வயது மூன்று அல்லது நான்கு எனவும் தெரிய வருகிறது. இதனால் குழந்தைகள் மீது பாலியல் வன்முறை மேற்கொள்வோருக்கு மரணதண்டனை விதிக்குமாறு மகளிர் அமைப்புகள் கோரியுள்ளன. (ரி)

---

# கும்பாபிஷேகம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை புலோலி அருள்மிகு பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் ஆலய திரிதள நூதன இராசகோபுர பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நாளைமறுதினம் 14ம் திகதி நடைபெறவுள்ளது.

இவ் அழகிய 16 அடி உயரமான திரிதள நூதன இராஜகோபுர கட்டிட வேலைகளை ஸ்தபதி தில்லையம்பலம் குழுவினரும் சிற்பவேலைகளை இந்தியா தமிழ்நாட்டைச்சேர்ந்த ஸ்தபதி இராஜேந்திரம் தர்மலிங்கமும் செய்திருந்தனர். (52)

---

# மன்னார்த் தீவில் குடிநீருக்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

மன்னார் தீவில் உள்ள கிணறுகளின் நீர் வற்றியதையடுத்து குடிநீருக்கும் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு குடும்பத்திற்கு ஒரு குடம் தண்ணீர் பிறஇடங்களில் எடுத்து வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மாரிகாலம் ஏற்பட்ட பின்னரே குடிநீர்த்தட்டுப்பாடு நீங்கும் என செய்திகள் தெரிவிக்கின்றன. (56)

# ராவுக்கு கிடைக்காத பாதுகாப்பு ஜெயலலிதாவுக்கு கிடைக்கிறது

(சென்னை)

இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கு கூட இல்லாத பாதுகாப்பு முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

செல்வி ஜெயலலிதாவுக்கு அளவுக்கதிகமான பாதுகாப்பு கொடுக்கப்படுவது குறித்து ஒரு அரசியல் விமர்சகர் தெரிவித்திருப்பதாவது:

தன்னைச் சுற்றி மிகப்பெரிய பாதுகாப்பு சுவரை அவர் எழுப்பிக்கொண்டிருக்கிறார். கறுப்புப்பூனை படைகளின் கடும் பாதுகாப்பு அவருக்கு அளிக்கப்படுவது போல வேறு எவருக்கும் அளிக்கப்படுவதில்லை.

முதல்வர் ஜெயலலிதா சென்னை மாநகரில் மையப் பகுதியில் உள்ள தமது பென்ஸ் காருடன் இல்லத்திலிருந்து கோட்டையிலுள்ள தலைமைச் செயலகத்திற்கு கிளம்பி விட்டார் என்றால் அவர் பயணம் செய்யும் வழிநெடுகிலும் போக்குவரத்து பணிக்கணக்கில் கூட ஸ்தம்பித்துவிடும்.

உலகமே தன்னை ஒருகாவல் தெய்வமாகப்போற்றிக் கொண்டாட வேண்டும் என விரும்புகிறார். அவரை எவரும் எளிதில் நெருங்க முடியாது.

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண றோட்டறிக் கழகத்தின் இளைஞர் அமைப்பான இன்றறக்ட் கழக இயக்குனர் சபை அங்கத்தவர்களுக்கான பயிற்சி முகாமின் விருது வழங்கும் வைபவம் இன்று சனிக்கிழமை பகல் ஒரு மணிக்கு யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறுகின்றது.

இந்நிகழ்வுக்கு யாழ்ப்பாண றோட்டறிக் கழக தலைவர் வி. ரி. சிவலிங்கம் தலைமை தாங்குவார். (இ-எஸ்)

## ஜெயலலிதாவுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற 30 வயது இளைஞரை பொலிசார் கைது செய்தனர்.

கடந்த சனிக்கிழமை முதலமைச்சருக்கு விலாசமிடப்பட்ட இந்த செய்தியை மேற்படி கருமபீடத்தில் கையளித்த உடனே, சந்தேகம் கொண்ட உத்தியோகத்தர்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். அந்த இடத்திற்கு உடனடியாக விரைந்த பொலிசார் 'ஜோ'வை கைதுசெய்தனர்.

திருச்சியில் ஒரு வைபவத்தில் கலந்துகொள்வதற்காக எதிர்வரும் 15ம் திகதி ஜெயலலிதா திருச்சிவர இருப்பதும் குறிப்பிடத்தக்கது. [சி]

## இராசி

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

பணி.

துலாம்: தெய்வபக்தி, சொல்வன்மை, அதிகபிரயாசம்.

விருச்சிகம்; அடம்பிடித்தல், அவசர போக்கு, சுபச்செலவு.

தனுசு: குடும்ப துன்பம், தொழில் சிக்கல், பதட்டம்.

மகரம்; கல்வி ஞானம், புதிய பதவி, பயணம்.

கும்பம்: கடமை தவறுதல், மனப்போராட்டம், அடிமை நிலை.

மீனம்: மனமகிழ்ச்சி, இனசன வருகை, பாராட்டு.

—ஜோஸ்யர்

## உதைபந்தாட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

குருநகர் பாடுமீன் சமூகத்துக்கும், பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகத்துக்குமிடையில் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று சனிக்கிழமை நடாத்தப்படவிருந்த சாம்பியன் போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் நாளை ஞாயிற்றுக்கிழமை அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடாத்தப்படவுள்ள மற்றைய சாம்பியன் மோதல்கள் நடைபெறுமென யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் திரு. எஸ். ரி. கணநாதன் தெரிவித்தார். (வி)

## பரீட்சை பிற்போடப்பட்டது

[அம்பாறை]

அம்பாறை மாவட்டத்தில் வடக்கு- கிழக்கு மாகாண சபையால் கணித, விஞ்ஞான ஆசிரியர்களை தெரிவு செய்வதற்காக நடாத்தப்படவிருந்த நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் 3ம், 4ம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சை இம்மாதம் 15ம், 16ம் திகதிகளில் நடைபெறவிருந்ததாக வடக்கு- கிழக்கு மாகாண சபையின் கல்வியமைச்சு செயலர் எம். எச். எம். மொஹைதீன் தெரிவித்துள்ளார். [இ-க]

## கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லும் அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கிலும் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் இவர்களை குடியமர்த்துவதற்காகவே இந்த நான்கு அகதிமுகாம்களும் மூடப்படவுள்ளதாம். (இ-சி)

# மரண அறிவித்தல்

## திருமதி ஆச்சியம்மா தம்பிஐயா

கோண்டாவில் கிழக்கு குமரகோட்டத்தைச் சேர்ந்த திருமதி ஆச்சியம்மா தம்பிஐயா 10-09-92 வியாழன் காலமானார். இவர் தம்பிஐயாவின் அன்பு மனைவியும், திரு. த. கெங்காதரமூர்த்தி [ஜேர்மனி, முன்னைநாள் நல்லூர் ப. நோ. கூ. சங்க கிளை முகாமையாளர்], திரு த சோதிநாதன் [முத்தையன் கட்டு]. திரு. த. லோகநாதன், திருமதி இரத்தினபதி சிவராசா ஆகியோரின் அன்புத்தாயாரும், திருமதி சூரியகுமாரி கெங்காதரமூர்த்தி (ஜேர்மனி], திருமதி சோதிநாதன், திரு ந சிவராசா [இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் (12-9-92 இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோண்டாவில் காஞ்சுக்கால் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. ந. சிவராசா

குமரகோட்டம்,
கோண்டாவில் கிழக்கு. (சி 6806)

★ முத்தமிழ் விழா

# இருவருடங்களுக்கு ஒருமுறை சிறப்பாக நடைபெறும்

- தேவர் உரை

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ் விழாவை நாம் இம்முறை மிகச்சிறப்பாக நடாத்தத் திட்டமிட்டிருந்தோம். ஆனால் இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் இவ்விழாவை நடாத்தமுடியாது போய்விட்டது.

ஆனால் இவ்விழாவை யொட்டி வெளியிடப்படவிருந்த முத்தமிழ்விழா மலர் தமிழ் மக்களுக்கு பயன்படாமல் போய்விடக்கூடாது என்பதற்காகவே இம்மலர் வெளியீட்டை நாம் இன்று நடாத்துகின்றோம்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக துணைப் பொறுப்பாளர் திரு. தேவர் கூறினார்.

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நேற்றுப்பிற்பகல் நடைபெற்ற முத்தமிழ் விழா மலர் வெளியீட்டு வைபவத்துக்கு தலைமை தாங்கிய திரு. தேவர் இவ்வாறு கூறினார். அவர் தமது தலைமையுரையில் மேலும் கூறுகையில்: ''இனிமேல் இருவருடங்களுக்கு ஒரு தடவை முத்தமிழ்விழாவை மிகச்சிறப்பாக நடாத்தத் திட்டமிட்டுள்ளோம் என்று கூறினார்.

முத்தமிழ்விழா மலரை வீடுதலைப்புலிகள் இயக்க மூத்த உறுப்பினர் திரு. இளங்குமரன் வெளியிட்டுவைத்தார்.

முதல் பிரதியை யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவு பொறுப்பாளர் செல்வி ஆர்த்தி பெற்றுக் கொண்டார். (சு-வி-இ)

## வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டிப் பகுதியில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்கா படையினருடன் நேற்று ஏற்பட்ட மோதல் ஒன்றில் சிதம்பரசன் அல்லது லோலோ [சின்னையா தயாபரன் - இருபாலை கோப்பாய்தெற்கு வீரச்சாவு அடைந்தார்.

இதேவேளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தொன்றில் லெப். பூபாலேசுயுதம் கிருஷ்ணகுமார் அல்வாய் வடக்கு, பருத்தித்துறை] வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவடைந்த இரு போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். [க]

## பென்சன் வவுச்சர்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

தென்னை உரம் - 50 மெற். தொன். அமோனியம் சல்பேற் - 100 மெற். தொன். மரக்கறி விதை - 02 மெற். தொன். நிலக்கடலை 1½ மெற் தொன். அரிசி - 1000 மெற் தொன். மா - 1250 மெற் தொன். சீனி - 200 மெற் தொன். பால்மா - 14 மெற் தொன். பயறு - 45 மெற் தொன். கௌபீ - 50 மெற் தொன்.

யாழ். அரசினர் மருத்துவமனைக்கு 18 மெ. தொன் மருந்து வகைகள், யாழ். மாவட்ட இலங்கை வங்கிக்கு மண்ணெண்ணெய், யாழ். மாநகரசபைக்கு 10 பரல் மண்ணெண்ணெய் 1 பரல் டீசல், வடக்கு கிழக்கு மாகாணசபை அரச ஊழியர்களுக்கான சீருடைத்துணிகள் 1107 மீற்றர்கள்.

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்திற்கு கிராமசேவை அலுவலர்களின் நற்சான்றிதழ் பத்திரப் புத்தகங்கள் 25 டைல்களும், ஆட்பதிவுத் அடையாள அட்டைகள்500, பிறப்பு அத்தாட்சிப் பத்திரப் புத்தகம் 100, நானாவித படிவங்கள் 1000, ஜெனரேற்றர் 2, உணவு முத்திரைகள், பாடசாலை மாணவர்களின் மதிய உணவு முத்திரைகள் 21 பார்சல், செப்டெம்பர் மாதத்திற்கான பென்சன் வவுச்சர்களும், 275 தபால் பைகளும் அடங்குகின்றன.

இத்துடன் தனியார் வர்த்தகர்களுக்கு மருந்து வகைகளும், பூடு, பெருஞ்சீரகம், இஞ்சிக்கிழங்கு, சாக்கரை, மல்லி, சாம்பிராணி ஆகியன 35 மெ தொன்னும் இக்கப்பலிலேயே கொண்டுவரப்பட்டுள்ளன. (இ 160)

## பரீட்சை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மீளாய்வு செய்ய ஒரு பாடத்திற்கு 75ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டி இம்மாதம் 21ம் திகதிக்கு முன் பரீட்சை இலாகாவுக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. (சி-க)

## ரைம்ஸ் சஞ்சிகை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தனைப் பார்க்க முடிந்ததாகவும், இம்முறை வந்தபோது பலமடங்கு சேதங்களையும், தமிழ் மக்களின் பெருங் கஷ்டங்களையும், கவனிக்கக்கூடியதாக இருக்கிறதென்றும் அவர் தெரிவித்தார். (இ-160)

## ம. எண்ணெய் லீற்றர் 40 ரூபா

(யாழ்ப்பாணம்)

இன்றைய யுத்தகால சூழ்நிலையில் பலவிதமான நெருக்கடிகள், காரணங்கள் என்பவற்றை கருத்திற்கொண்டு மண்ணெண்ணெய் வியாபாரம் செய்யும் சகல வர்த்தகர்களும் ஆகக்கூடிய சில்லறை விலையாக ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 40 ரூபாவுக்கு விற்கலாம் என தமிழீழ காவல்துறை அறிவித்துள்ளது. (இ)

## மூதூர் சம்பவம்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கடைசியாக கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்களில் 24 பேர் ராணுவத்தினர் என்றும் 16 பேர் பொதுமக்கள் என்றும் உறுதிசெய்யப்பட்ட செய்திகள் தெரிவிக்கின்றன.

25 ராணுவத்தினரும் 25 பொதுமக்களும் ஒரு போர் தாங்கி சகிதம் இப்படகில் சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

இதுவரை 39 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. சடலங்களைத் தேடும் பணிதொடர்ந்து நடைபெறுகிறது.

இதேவேளையில் இறந்தவர்களின் உறவினர்கள் உடல்களை பெறுவதற்காக கொழும்பில் பெருமளவில் கூடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [கே]

## 18 மாணவர்களை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ளது

1989 ம் ஆண்டு எம்பிலிப்பிட்டியப் பகுதியில் உள்ள 18 பாடசாலை மாணவர்களை 8 இராணுவத்தினர் அப்பாடசாலை அதிபரின் உதவியுடன் கடத்திச்சென்று கொலை செய்துள்ளனர் என்று மனித உரிமைக்குழு கூறியுள்ளது.

அரசுக்கு எதிராக செயல்பட்டார்கள் என இராணுவத்தினால் முன்னர் கைது செய்யப்பட்ட 32 பாடசாலை மாணவர்களின் நிலை பற்றி இன்னும் ஏதும் தெரியாது இருக்கின்றது என்று இலங்கை வழக்கறிஞர் சங்கம் முன்னர் குறிப்பிட்டதையும் இக்குழு தற்போது சுட்டிக்காட்டியுள்ளது.

இச்சம்பவங்கள் பற்றி உடனடி விசாரணை நடத்தும்படி அரசின் மனித உரிமைக்குழு தற்போது அரசைக் கேட்டுள்ளது. (இ-வி)

## வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

[சென்னை]

சென்னை ஸ்ரீராமச்சந்திரா மருத்துவ கல்லூரியை தனியார் அறக்கட்டளை ஒன்றிடம் தமிழக அரசு ஒப்படைத்ததை எதிர்த்து மருத்துவக்கல்லூரி மாணவர்களும், மருத்துவர்களும் கடந்த 50 நாட்களாக நடாத்திவந்த வேலைநிறுத்தம் நேற்று விலக்கிக் கொள்ளப்பட்டது. [இ-க]

## க. பொ. த.

(1ம் பக்கத் தொடர்ச்சி]

குறிப்பிட்டபாடத்திற்கான வினாத்தாள் பரீட்சை நடைபெறும் தினத்திற்கு முன்னமேயே வெளியிடப்பட்டதாக பொதுமக்களால் சுட்டிக் காட்டப்பட்டதையடுத்தே மேற்படி பாடத்திற்கான பரீட்சையை திரும்ப நடத்துவது என முடிவு எடுக்கப்பட்டதாக பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் ஆதர்வெதமுல்ல தெரிவித்தார். (க)

## மூதூர் படகு வெடிப்பின்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

டில் கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக ஆராயப்பட்டதாகவும் விடுதலைப்புலிகளின் அதிரடித் தாக்குதல் காரணமாக இங்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை முற்றுமுழுதாக மாற்றியமைப்பதென முடிவு செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது. (இ)

## பிரபாகரன்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்துப்பேசும் பாட்டாளி மக்கள் கட்சி மீது மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார். (இ-க)

## படகு கண்ணி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னரை ஏற்றிக்கொண்டு படகின் மூலம் கடலைக் கடக்க முற்பட்டபோதே புலிகளின் கண்ணிவெடியில் படகு சிக்குண்டு சிதறியதாவும் இதில் 44 பேர்வரை இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதேவேளையில் இதுபோன்ற ஒரு படகு கண்ணி வெடியில் சிக்கி சிதறியது கிழக்கு மாகாணத்தில் இதுவே முதற் தடவையென்று இராணுவ பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். [வி]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] அச்சகத்தில் 1992-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under [License No. [illegible]